الدرس الثاني

## تابع أحكام اللباس

பாடம் - 2

## ஆடை அணிவதன் சட்டங்கள் தொடர்ச்சி

1. கணுக்காலுக்குக் கீழே தொங்கும் வகையில் ஆடை அணிவது ஆண்களுக்குத் தடுக்கப்பட்ட காரியங்களில் ஒன்றாகும். ஏனெனில்

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ مَا أَسْفَلَ مِنْ الْكَعْبَيْنِ مِنْ الْإِزَارِ فَفِي النَّارِ (خ٥٧٨٧)

'கணுக்காலுக்குக் கீழே தொங்கும் வகையில் அங்கி அணிபவர் நரகத்தில் (புகுவார்)' என நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி(5787)

இவ்வாறாக அரேபியர்கள் அணிகின்ற தோப், ஸிர்வால் போன்ற ஆடை களையும் பேண்ட், லுங்கி போன்ற ஆடைகளையும் கணுக்காலுக்குக் கீழே தொங்கும் வகையில் அணிவது தடுக்கப்பட்டதாகும். இந்தத் தடை பெருமைக்காக அணிபவர்களுக்கு மட்டும் தான் என்பதல்ல. பெருமைக்காக யார் இவ்வாறு அணிகிறாரோ அவர் இன்னும் கடுமையாக எச்சரிக்கப்படுகிறார்.

عَنْ ابْنِ عُمَرَ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ مَنْ جَرَّ ثَوْبَهُ خُيَلَاءَ لَمْ يَنْظُرْ اللهُ إِلَيْهِ يَوْمَ الْقِيَامَةِ (خ٣٦٦٥،م٢٠٨٥)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'பெருமைக்காக தனது ஆடையை யார் தரையோடு இழுத்துக் கொண்டு செல்கிறாரோ அவரை மறுமையில் அல்லாஹ் பார்க்க மாட்டான்.' அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரி(3665), முஸ்லிம்(2085)
பெண்கள் தமது பாதங்களை மறைக்கும் வகையில் நீளமாக ஆடை அணிந்து கொள்ள வேண்டும்.

2. ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி மறைக்கபட வேண்டிய உறுப்புகள் வெளியே தெரியும் அளவுக்கு மெல்லிய அல்லது அரை குறையான ஆடை அணிவது கூடாது.
3. பெண்கள் ஆண்களுக்கோ ஆண்கள் பெண்களுக்கு ஒப்பாகின்ற வகையில் ஆடை அணிவது தடுக்கப்பட்டதாகும். ஏனெனில்

عَنْ ابْنِ عَبَّاسٍ قَالَ لَعَنَ رَسُولُ اللهِ ﷺ الْمُتَشَبِّهِينَ مِنْ الرِّجَالِ بِالنِّسَاءِ وَالْمُتَشَبِّهَاتِ مِنْ النِّسَاءِ بِالرِّجَالِ تَابَعَهُ عَمْرٌو أَخْبَرَنَا شُعْبَةُ (خ٥٨٨٥)

'பெண்களுக்கு ஒப்பாகின்ற ஆண்களையும் ஆண்களுக்கு ஒப்பாகின்ற பெண்களையும் அல்லாஹ்வின் தூதர் சபித்துள்ளார்கள்' அறிவிப்பவர் - இப்னுஅப்பாஸ்(ரலி) நூல் - (புகாரி-5885)

4. முஸ்லிமல்லாதவர்களுக்கு ஒப்பாகின்ற வகையில் ஆடை அணிவதும் தடுக்கப்பட்டதாகும். எனவே ஒரு முஸ்லிமல்லாதவர்களுக்கே உரிய பிரத்தியேகமான ஆடைகளை அணிவது கூடாது.

عن ابْنَ عَمْرٍو قَالَ رَأَى رَسُولُ اللهِ ﷺ عَلَيَّ ثَوْبَيْنِ مُعَصْفَرَيْنِ فَقَالَ إِنَّ هَذِهِ مِنْ ثِيَابِ الْكُفَّارِ فَلَا تَلْبَسْهَا (م٢٠٧٧)

அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி) அறிவிக்கிறார்கள்: 'நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் இரண்டு காவி உடைகளைக் காட்டி இவை காபிர்களின் உடையாகும். இவற்றை அணியாதேஎன்று கூறினார்கள்.' (முஸ்லிம்-2077)